

Vol.30 | No. 7| JULY 2026
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்




**SAINT ALPHONSA, PRAY FOR US**

## June 2



FUNERAL CEREMONY OF REV. FR. THOMAS POWATHUPARAMBIL AT KOOROPPADA



## June 15

INTER DEPARTMENT MEETING AT SANGAMAM



The Official Organ of the Diocese of Thuckalay
Volume 30 No : 7 July 2026



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| BISHOP'S MESSAGE | 02 |
| உயர் பேராயர் திருமுகம் | 07 |
| மறைக்கல்வி | 13 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 15 |
| சிறுமலர் மிஷன் லீக் | 16 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 17 |
| உறவிய மலர் | 19 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 20 |
| சீனாய் இறையியல் கல்வி மையம் | 22 |
| புதுவாழ்வு மையம் | 23 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 24 |
| மறைமாவட்ட செய்திகள் | 26 |
| மறைவட்ட செய்திகள் | 30 |
| தென்காசி மறைதள செய்திகள் | 36 |
| MONTHLY AGENDA - July 2026 | 38 |
| Bishop's Engaugements - July 2026 | 39 |


*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Thomas Kuzhikodil**

Associate Editors
**Fr.Thomas Sathiyanesan**
**Mr. S.M.Edwinson**

Published by:
**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Design & Layout
**Merin Sujith M.R**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/183/2026** **30 June 2026**

**Dear Readers,**

**Greetings from Bishop's House, Thuckalay!**

As we enter July, the Catholic Church, particularly our Syro-Malabar Church, will celebrate two important feasts – the Solemnity of St Thomas the Apostle, who brought Faith to our land, and the feast of St Alphonsa Muttathupadathu, the first canonised saint born on Indian soil. In this circular, I wish to highlight St Alphonsa in light of the sudden demise of Rev. Fr Thomas Powathuparampil, a great promoter of devotion to her.

A Daughter of India, A Saint of the Church

On 28 July 1946, a young Franciscan Clarist nun breathed her last in a small room of the convent at Bharananganam in Kerala. She was thirty-five. She had endured with extraordinary patience, offering every pain as a gift to God. The Church, recognising in her life the authentic mark of Christian holiness, declared her Blessed in 1986. On 12 October 2008, Pope Benedict XVI canonised her in Rome — the first woman born in India to be raised to the altars.

St Alphonsa's life teaches us that holiness is not reserved for the learned or the powerful but is the vocation of every soul that surrenders itself fully to the will of God. She is a companion to our pastoral ministry — a saint who understands suffering from within and intercedes with unfailing tenderness before the throne of God on behalf of all who call upon her.

The Shrine at Nagercoil and the Annual Pilgrimage

Within our Eparchy, the Shrine of St Alphonsa at Nagercoil has become a place of grace, prayer, and pilgrimage for an ever-growing number of the faithful. The witness to answered prayers and renewed faith continues to draw pilgrims to her shrine year after year.

The annual feast pilgrimage to the Alphonsa Shrine in Nagercoil is one of the most cherished events in our Eparchal calendar. Over the years, it has become a joyful convergence of faith and fellowship, bringing together the Latin and Syro-Malabar faithful in a spirit of shared devotion. As you know, the nine-day novena in honour of St Alphonsa, recited in every parish of our Eparchy in the days preceding her feast, prepares the hearts of the faithful to receive the grace she so generously obtains for those who invoke her.

In recent years, the SMYM of the Eparchy has organised a pilgrimage on foot to the shrine — a walk of faith undertaken by our young people, accompanied by prayer and song. This walking pilgrimage has become a powerful sign of the youth's living devotion to St Alphonsa, and I am grateful to you for the pastoral support you provide to your young parishioners.

In Grateful Memory: Fr Thomas Powathuparampil

It would be impossible to speak of devotion to St Alphonsa in this Eparchy without recalling with gratitude the man who devoted himself with singular passion to spreading her spirituality among us — the late Fr Thomas Powathuparampil.

Fr Thomas was, above all, an apostle of St Alphonsa. He devoted his best energies, his gifts of mind and heart, and the strength of his years to promoting her life, virtues, and message. He recognised in her the particular grace that India and the Church needed — the witness of joyful suffering embraced in love — and laboured tirelessly to make that witness known among our priests, religious, and people.

Following the historic canonisation of St Alphonsa on 12 October 2008, Fr Thomas took the initiative to organise a grand celebration within the Eparchy to mark the occasion. He brought together the faithful of both the Latin Diocese, Syro-Malankara Diocese and the Syro-Malabar Eparchy, creating a massive and joyful gathering on the school campus at Nagercoil. That celebration left a deep impression on all who participated and sowed the seed from which our present tradition of solemn annual observance has grown. Every year since, the feast of St Alphonsa has been celebrated with increasing solemnity and participation — a living tribute to the

vision and zeal of Fr Thomas.

Fr Thomas did not merely organise events. He formed souls. He preached her spirituality from the pulpit and introduced novena prayers in the parishes. He was personally convinced that Saint Alphonsa had a special message for the suffering people of our time, and he communicated that conviction to all he encountered with warmth and persuasion. His entire priestly ministry was, in many ways, a prolonged act of devotion to her.

This year, for the first time, we shall celebrate the feast of St Alphonsa without Fr Thomas Powathuparampil among us. He has gone before us to the One in whose service he laboured so faithfully. As priests, we will feel his absence in a particular way — he was a colleague, a fellow priest who, by example, showed us what it means to be consumed by a single apostolic passion. The tradition he built is now entrusted to us. I ask each of you to carry it forward with the same love and zeal.

Please remember Fr Thomas in your Mass intentions throughout the novena and on the feast day. He generously devoted his life to God and to God's people. May St Alphonsa, whom he loved and proclaimed, intercede for the repose of his soul!

The Spirituality of St Alphonsa for Our Priestly Life

The spirituality of St Alphonsa rests on a profound truth our age is reluctant to hear: suffering, willingly accepted and offered to God, is not wasted. It is participation in the redemptive mystery of the Cross. Alphonsa knew illness, misunderstanding, and deprivation from her early years. She did not deny the weight of these crosses, but received them as the very means by which God was fashioning her soul.

For us priests, this has particular significance. Our ministry is not immune to misunderstanding, fatigue, and interior desolation. There are days when pastoral labour seems unrewarded, our communities appear indifferent, and we feel inadequate. In those moments, the example of Alphonsa speaks to us not as an ideal beyond our reach, but as a companion who has walked that path and emerged radiant. Her intercession is especially powerful for those who bear hidden

burdens — and she understands, from her own experience, what it means to wait for God in the darkness.

What made Alphonsa's suffering redemptive was not its intensity but its orientation. She did not merely endure — she offered. There is a world of difference between pain simply borne and pain consciously placed on the altar as an act of love. Alphonsa learned, over years of slow purification, to turn every affliction into prayer and every limitation into a gift. This is the ascesis she proposes to us — not the dramatic mortifications of an earlier age, but the daily, quiet discipline of receiving what God permits and returning it to Him as an oblation. For a priest, the material for this offering is never far away: the parishioner who tests our patience, the meeting that exhausts without yielding fruit, the prayer that feels arid, the loneliness of the rectory at night. Alphonsa teaches us that none of this need be lost. All of it, surrendered in love, becomes priestly intercession.

Her spirituality, at its root, is one of abandonment — and she stands within a long tradition stretching from Saint Paul through Saint John of the Cross to Blessed Charles de Foucauld. To abandon oneself to God is not passivity; it is the most demanding act of faith. It requires us to relinquish the need to control outcomes, to measure results, and to justify our ministry by visible fruit. Alphonsa lived this abandonment not as a theological concept but as a daily existential choice, made in a body that would not cooperate and in circumstances she had not chosen. She became, precisely through that surrender, a hidden powerhouse of grace for the Church. We too are called to that hiddenness — to a priesthood whose deepest fruitfulness may never be visible to us in this life, yet is real and lasting before God.

## CONCLUSION

On 3 July, we celebrate Dukhrana, the feast of St Thomas the Apostle. This feast holds particular significance for us, as we belong to the Syro-Malabar Church — a Church that traces its origins to the missionary zeal of this Apostle, who brought the Good News to India's shores. In a profound sense, we are the children of his faith and witness.

The doubt of St Thomas after the Resurrection of Jesus was not a failure of faith but the beginning of a deeper journey. When the Risen Lord appeared and invited him to see and touch, Thomas responded with one of the most luminous professions of faith in all of Scripture: “My Lord and my God!” (John 20:28). His encounter with the Risen Christ teaches us that honest doubt, held with humility and an earnest desire to seek, can become the very threshold of transformative belief. Curiosity and searching, when oriented towards the Lord, are not obstacles to faith — they are pathways to it.

As we celebrate this feast, let us draw renewed strength from our Apostle’s example. May our faith in Jesus Christ — crucified, risen, and alive in His Church — deepen and become more personal through every ministry we undertake and every service we render. Like St Thomas, who carried the Gospel to distant lands at great personal cost, may we too be courageous and credible witnesses to the Risen Lord in our homes, communities, and apostolic works.

Let us lead the brothers and sisters entrusted to our care into a living, personal encounter with the Lord Jesus. At its heart, our ministry is nothing less than this — to bring others to the moment when, touched by grace, they can say from the depths of their hearts: “My Lord and my God!”

May St Thomas and St Alphonsa pray for our Eparchy, our priestly fraternity, the sick and suffering in our parishes, and all who seek God’s mercy! May their example inspire in us a deeper surrender to God’s will and greater fidelity to our priestly vocation!

May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Mar Raphael Thattil

Major Archbishop of the Syro-Malabar Church

**Prot.No. 0444/2026**

## திருமுகம்

## துக்ரானா திருவிழா சபை நாள் – 2026

## சீரோ–மலபார் சபையின் பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும், சீரோ–மலபார் சபையின் உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் எழுதுவது.

**நம் ஆண்டவரின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!**

ஈசோ மெசியாவில் எனக்கு மிகவும் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

நம் நம்பிக்கையின் தந்தை மார் தோமாவின் "துக்ரானா" பெருவிழாவை நாம் மீண்டும் ஒருமுறை கொண்டாடுகிறோம். அச்சத்தால் சோர்ந்து போயிருந்த சீடர்களை நோக்கி, "நாமும் செல்வோம். அவரோடு இறப்போம்" (யோவான் 11:16) என்று ஊக்குவித்த புனித தோமா. நற்செய்தியை அறிவிப்பதற்காக இந்தியாவுக்கு வந்து, கி.பி 72-ல் சென்னைக்கு அருகிலுள்ள சின்னமலையில் தியாக மரணம் அடைந்தார். அவரது மறைபரப்புப் பணிகளுக்கும் தியாக மரணத்திற்கும் மிகச்சிறந்த சாட்சிகளில் ஒன்று, இந்தியாவில் வாழும் மார் தோமா கிறிஸ்தவ சமூகம் ஆகும். இவர்கள் திருத்தூதர் தங்களுக்குக் கையளித்த பாரம்பரியத்தை இன்றும் போற்றி, அதன்படி வாழ்ந்து வருகின்றனர். சீரோ-மலபார் சபையைப் பொறுத்தவரை, ஜூலை 3-ஆம் தேதி என்பது ஆழமான ஆன்மீக மற்றும் திருச்சபை அடையாளத்தைக் குறிக்கும் ஒரு நாளாகும். ஆகவே தான் மார் தோமாவின் தியாக மரணப் பெருவிழாவை சீரோ-மலபார் சபையின் "சபை நாள்" ஆக நாம் கொண்டாடுகிறோம்.

பிற திருத்தூதர்களின் சாட்சியத்தை மட்டுமே நம்பாமல் உயிர்த்தெழுந்த ஆண்டவரைத் தன் சொந்தக் கண்களால் பார்க்க வேண்டும் என்று திருத்தூதர் தோமா பிடிவாதமாக இருக்கும் நற்செய்திப் பகுதி நம் உள்ளத்தைத் தொடுவதாகும். தோமாவின் சந்தேகம் என்பது எதிர்மறை அர்த்தத்தில் உருவான நம்பிக்கையின்மை அல்ல. ஆரம்பத்தில் சந்தேகம் கொண்ட அவரே. இறுதியில் நம்பிக்கையின் ஒரு தைரியமான சாட்சியாக மாற்றமடைந்தார். சந்தேகத்திலிருந்து

விசுவாசத்திற்கும், தேடுதலிலிருந்து சாட்சிய வாழ்விற்கும். சீடத்துவத்திலிருந்து தியாக மரணத்திற்கும் தோமா மேற்கொண்ட அந்தப் பயணம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஆன்மீகப் பயணமாக அமைய வேண்டும். இதனால்தான் புனித பெரிய கிரகோரியார். "தோமாவின் நம்பிக்கையின்மை மற்ற சீடர்களின் நம்பிக்கையை விட நம் நம்பிக்கைக்கு அதிக பயனுள்ளதாக இருந்தது" என்று குறிப்பிட்டுள்ளார் (Homiliae in Evangelia 26,7)

இன்றைய தலைமுறை; சந்தேகங்களுக்கும் நிச்சயமற்ற தன்மைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகிறது. இந்த செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தகவல் புரட்சியின் காலம் பல சவால்களை நம் முன் வைக்கிறது. உலகளாவிய திருச்சபைக்கு திருத்தந்தை 14-ஆம் லியோ எழுதிய 'மேக்னி ஃபிகா ஹுமானிட்டாஸ்" (Magnifica Humanitas) மகத்தான மானுடம் என்ற தனது முதல் மடலின் மூலம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். இம்மடல் பெரிய ஆர்வத்துடனும் சிந்தனையுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கடவுளின் சாயலையும் மாட்சிமையும் தாங்கி நிற்கும் மனிதனுக்கே தொழில்நுட்பம் சேவை செய்ய வேண்டுமே தவிர. மனிதகுலம் ஒருபோதும் தன் சொந்த தொழில்நுட்பப் படைப்புகளுக்கு அடிமையாகிவிடக் கூடாது என்பதுதான் அந்த மடலின் மைய நோக்கம் திருத்தந்தை இவ்வாறு கூறுகிறார்: "மனித கண்ணியம் என்பது ஒரு நபரின் திறமைகள், செல்வம் அல்லது சமூக அந்தஸ்தைச் சார்ந்ததோ. அல்லது அவர்கள் எடுக்கும் சரியான அல்லது தவறான முடிவுகளைச் சார்ந்ததோ அல்ல மாறாக, அது ஒவ்வொரு மனிதனுக்கும் முந்தையதும், அவர்களைக் கடந்ததுமான ஒரு கொடையாகும். இது கடவுளின் மாறாத அன்பின் வெளிப்பாடாக அவரால் வழங்கப்பட்டுள்ளது" (Magnifica Humanitas, 50). மேலும், மனித கண்ணியத்தையும் பெருமையையும் பாதுகாக்கும் அதே வேளையில், நீதியும் சகோதரத்துவமும் நிறைந்த உலகைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஒவ்வொரு தலைமுறைக்கும் உள்ளது என்பதையும் இத்திருத்தூது மடல் நினைவூட்டுகிறது. நமக்கு

பெரும்பாலும்துருவமுனைப்பையும்பகையையும்உருவாக்கும்இன்றையடிஜிட்டல் ஊடக கலாச்சாரத்தில், உண்மையைத் தேடுவதும், புத்திசாலித்தனமான மற்றும் பொறுப்பான முடிவுகளை எடுப்பதும் கிறிஸ்தவர்களின் இன்றைய கடமை என்பதை திருத்தந்தை நினைவூட்டுகிறார். வதந்திகள் வேகமாகப் பரவி, உண்மை அடிக்கடி மறைக்கப்படும் இக்காலத்தில், நாமும் புனித தோமாவைப் போல உண்மையைத் தேடுபவர்களாக மாற வேண்டும். சமூக ஊடகங்கள் வாழ்வின் பல அம்சங்களில் நன்மை பயக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில், அது பொய், வெறுப்பு மற்றும் அவதூறுகளைத் திட்டமிட்டுப் பரப்பும் ஒரு தளமாகவும்

மாறியுள்ளது. மற்றவர்களை இழிவுபடுத்தும், அப்பாவி மனிதர்களைப் பாதிக்கும். பொய்களைப் பரப்பும் செய்திகளைத் தாராளமாக உருவாக்கும்போதோ அல்லது பகிரும்போதோ, "கொலை செய்யாதே" என்ற ஐந்தாவது கட்டளை மீறப்படுகிறது. ஏனெனில் இத்தகைய செயல்கள் ஒரு நபரின் கண்ணியம், நற்பெயர் மற்றும் நல்வாழ்வைக் காயப்படுத்தக்கூடும். இன்று, நாம் எதிர்கொள்ளும் விசயங்களைக் கவனமாக ஆராயவும், நமக்குத் தெரியாதவற்றை உறுதிப்படுத்தவும். உண்மையற்றதை ஊக்குவிப்பதிலிருந்து விலகி நிற்கவும், பொய்மை எங்கு தோன்றினாலும் அதைத் தைரியமாக எதிர்க்கவும் தேவையான விவேகமும் விழிப்புணர்வும் நமக்கு முன்னெப்போதையும் விட அதிகமாகத் தேவைப்படுகிறது.

இன்று, நம் சமூகம் பெரும்பாலும் ஏழைகளையும் பலவீனமானவர்களையும் புறக்கணிக்கிறது. வயதான பெற்றோர் பல நேரங்களில் தங்கள் சொந்தப் பிள்ளைகளின் அலட்சியத்திற்கும் கொடுமைக்கும் பலியாகிறார்கள். குடும்பங்களுக்குள்ளும், சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் உறவுகள் முறியும்போது, நீதிக்காகவும் நேர்மைக்காகவும் நிற்பவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் கவலைக்குரியதாக அமைந்துள்ளது. போதைப்பொருள் பயன்பாடும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகளும் சமூகத்தின் நல்வாழ்வை அச்சுறுத்துகின்றன. மனித கண்ணியத்தைக் குலைத்து அழிக்கும் சூழ்நிலைகள் பல இடங்களில் காணப்படுகின்றன. திருத்தந்தை வலியுறுத்துவது போல, மனித பெருமை மற்றும் சுயசார்பின் அடையாளமான "பாபேல் கோபுரங்களை" தகர்ப்பதற்கும். கடவுளும் மனிதனும் இணைந்து வாழும், நீதியும் அமைதியும் நிலவும் ஒரு நகரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க (Magnifica Humanitas, 1).

குடும்பமே நம்பிக்கை வாழ்வின் முதல் பள்ளிக்கூடம். ஒன்றாக ஜெபிப்பது, உணவைப் பகிர்ந்து கொள்வது, குடும்ப வாழ்வின் பொறுப்புகளில் இணைந்து பங்கேற்பது ஆகியவை நீண்ட காலமாக நம் குடும்பங்களை வளர்த்து வலுப்படுத்திய அருமையான பாரம்பரியங்கள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களின் தனிப்பட்ட வேலைகளிலும் தொழில்முறை அர்ப்பணிப்புகளிலும் மூழ்கியிருக்கும் இக்காலத்தில், குடும்ப வாழ்வில் பகிரப்பட்ட ஆன்மீகத்தைப் பாதுகாக்க நாம் தவறிவிடுகிறோமா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தொழில்நுட்பத்தின் முறையான பயன்பாட்டுடன் சேர்த்து, மனித மற்றும் கிறிஸ்தவ விழுமியங்களையும் பகிர வேண்டும். திருத்தந்தை 14-ஆம் லியோ தனது மடலில், வலைதள அடிமைத்தனத்தின் ஆபத்து குறித்து எச்சரிக்கிறார். அலைபேசிகளின் அதிகப்படியான பயன்பாடு,

குடும்ப உறுப்பினர்களிடையே குறைந்து வரும் உரையாடல், குழந்தைகளிடையே அதிகரித்து வரும் திரை (screen) சார்பு மற்றும் செப புறக்கணிப்பு ஆகியவை இன்று குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களில் சிலவாகும். குடும்பச் சூழல் ஒரு நபரின் ஆன்மீக மற்றும் மனித உருவாக்கத்தில் ஆழமான மற்றும் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. எனவே, அனைத்து குடும்பங்களும் வழக்கமான இடைவெளியில் "இணையதள நோன்பு" (digital fasting) கடைப்பிடிக்குமாறும், உணவு உண்ணும் போது அலைபேசிகளை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும், குடும்ப ஜெபத்திற்காக ஒவ்வொரு நாளும் நேரத்தை ஒதுக்குமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிப்பு (Communion) என்பது திருச்சபை இயல்பின் மையமாக உள்ளது. எனவே, திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிப்பில் வாழவும் உழைக்கவும், அதை வளர்க்கவும் அழைக்கப்படுகிறார்கள். திருச்சபைக்குள் கருத்து வேறுபாடுகள் இயல்பாகவே எழலாம். இருப்பினும், குழு விவாத அல்லது பிரிவினைவாத மனப்பான்மைகள் திருச்சபையில் தூய ஆவியாருக்கு எதிரானவை. திருச்சபை என்பது நம் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பெரிய குடும்பம். எனவே, திருச்சபையின் நிறுவனங்களுடன் இணக்கமாகச் செயல்படும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. புனித சிப்ரியானின் வார்த்தைகள் இன்றும் பொருத்தமானவை: "திருச்சபையைத் தாயாகக் கொண்டிராத எவரும் கடவுளைத் தந்தையாகக் கொண்டிருக்க முடியாது"

நம் திருச்சபை 2026ஆம் ஆண்டை "சபை சமூகத்தை வலுப்படுத்தும் ஆண்டு" (Year of Community Empowerment)ஆகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தச் சிறப்புக் ஆண்டைக் கொண்டாடுவதற்காகப் பொது விவகாரங்களுக்கான ஆணையம் (Commission for Public Affairs) வடிவமைக்கப்பட்டு, ஆயர்மன்றத்தால் (Synod) அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களைத் திருச்சபையின் பல்வேறு நிலைகளில் திறம்படச் செயல்படுத்துவதை சம்பந்தப்பட்ட அனைவரும் உறுதி செய்ய வேண்டும். விசுவாசிகளின் சமூகம் என்ற முறையில், நமது நியாயமான உரிமைகளை உறுதியுடன் நிலைநிறுத்தும் அதே வேளையில், பிறருக்கு மதிப்பளிக்கவும், பொதுவான விவகாரங்களில் ஒத்துழைக்கவும், சாத்தியமான இடங்களில் மற்றவர்களுடன் கைகோர்க்கவும் நாம் பழக வேண்டும். சமூகத்தின் பொது நலனுக்காகவும், நீதியான உலகைக் கட்டியெழுப்புவதற்காகவும் அனைத்து மக்களுடனும் உரையாடலிலும் ஒத்துழைப்பிலும் ஈடுபடத் திருச்சபை தொடர்ந்து கடமைப்பட்டுள்ளது.

நம் விசுவாசத் தந்தையின் தைரியமான முன்மாதிரியைப் பின்பற்றி, அச்சமின்றி இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் கடமை நமக்கு

உள்ளது. நம் திருச்சபையின் உறுப்பினர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் நற்செய்திப் பணியாளர்களாகச் சேவை செய்வதற்காக நாம் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். இத்தருணத்தில், நற்செய்தி அறிவிப்புத் துறையில் நமது திருச்சபை சமீபத்தில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நாம் நன்றியோடு நினைவு கூர்கிறோம். குருக்கள் மற்றும் துறவிகளுடன் இணைந்து பல பொதுநிலை திருத்தொண்டு பணியாளர்களும் இந்த தூதுப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை நான் ஒரு ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். நம் திருச்சபையின் பொதுநிலை திருத்தொண்டு பணியாளர்களின் நற்செய்தி அறிவிப்பு முயற்சிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக, உயர் பேராயர் நிலையில் "ஜீவன் ஜோதி" (Jeevan Jyothi) என்ற இயக்கத்தின் தொடக்கத்தை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து திருத்தொண்டு முயற்சிகளுக்கும் சாத்தியமான எல்லா வழிகளிலும் நாம் ஆதரவளிப்போம், அவற்றின் வெற்றிக்காக ஆவலோடு ஜெபிப்போம்.

புனித தோமா திருத்தூதரின் புனிதக் கல்லறை அமைந்துள்ள மயிலாப்பூர் சாந்தோம் பேராலயத்திற்கு அருகில், ஓசூர் சீரோ-மலபார் மறைமாவட்டத்தின் தலைமையின் கீழ் ஒரு பயணியர் இல்லம் நிறுவப்பட்டு வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விசயமாகும். இந்த உன்னதமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியை மேற்கொண்டதற்காக ஓசூர் ஆயர் மார் செபாஸ்டியன் போலோளிப்பறம்பில் அவர்களுக்கும். ஒட்டுமொத்த மறைமாவட்டத்திற்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் நிறைவேற இந்த மறைமாவட்டத்திற்குத் தாராளமாக ஆதரவளித்த அனைவரையும் நான் நன்றியோடு நினைவு கூர்கிறேன். நம் விசுவாசத்தின் தந்தை மார் தோமாவின் கல்லறையின் அருகே தகுதியானதொரு வழிபாட்டுத் தலத்தையும் பயணியர் மையத்தையும் நிறுவும் இந்த நீண்ட நாள் கனவு, வருங்காலத் தலைமுறையினரின் ஆன்மீக நலனுக்காக முழுமையாக நனவாகும் பொருட்டு, சாத்தியமான வழிகளில் முழு மனதுடன் ஒத்துழைப்பை நல்குமாறு நமது அனைத்துப் பங்கினரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திட நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

ஈசோவில் மிகவும் பிரியமானவர்களே, இக்காலத்தில், மார் தோமா வழியாக நமக்குக் கையளிக்கப்பட்ட ஈசோ மெசியாவின் மீதான விசுவாசத்திற்குச் சான்று பகர நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நம் காலத்தில் ஆண்டவருக்குச் சாட்சியாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்த அனைவரும் அழைக்கப்படுவதில்லை. இருப்பினும், நம் திருச்சபை, சமூகம், குடும்பங்கள் மற்றும் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உண்மை, நீதி, விசுவாசம் மற்றும் பொறுமையின் தினசரி மறைசாட்சியாக வாழ நம் காலம் நம்மிடம் கேட்கிறது. நாம் பாபேல் கோபுரத்தைக் கட்டுபவர்களாக

இல்லாமல், கடவுளின் அரசை கட்டுபவர்களாக மாறுவோம் திருச்சபை, சமூகம் மற்றும் குடும்பத்திற்குள் கடவுளோடு இணைந்து வாழும் சமூகங்களை உருவாக்குவோம்.

உங்கள் அனைவருக்கும் துக்ரானாத் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். நம் அன்னை தூய கன்னி மரியா, புனித யோசேப்பு, புனித தோமா மற்றும் அனைத்துப் புனிதர்களின் பரிந்துரைகளும் ஆசிகளும் நமக்கும் நம்முடைய அனைத்து முயற்சிகளுக்கும் இருக்கட்டும் என வேண்டுதல் செய்கிறேன்.

2026 ஜூன் 20 அன்று காக்கநாடு, மவுண்ட் செயின்ட் தாமஸில் உள்ள உயர் பேராயர் செயலகத்திலிருந்து வழங்கப்பட்டது.

**மார் ராஃபேல் தட்டில்**
**சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்**

இத்திருமுகத்தை ஜூன் 28, 2026 ஞாயிறு அன்று சீரோ மலபார் சபையின் ஆலயங்கள், நிறுவனங்கள், துறவற சமூகங்கள், பயிற்சி மையங்கள், உயர் குருமடங்கள் என அனைத்திலும் திருப்பலிக்கிடையே வாசிக்க வேண்டும்




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு. [உரோமையர் 10:17]**

**தலைமையாசிரியர்களின் கூட்டம்**

தலைமையாசிரியர்களின் கூட்டம் 2026 ஜூன் 13 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலக அரங்கில் நடைபெற்றது. மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்கள் தலைமையில் துய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. தெற்றிவிளை மறைக்கல்வி ஆசிரியை அவர்கள் விவிலியம் வாசித்தார்கள். பத்துகாணி மறைக்கல்வி ஆசிரியை அவர்கள் புதிய இயக்குநரை வரவேற்று அறிமுக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அவர்கள் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி வகுப்புகள் வரும் வாரங்களில் நடைபெறும் என்றும் என்னென்ன வகுப்புகள் என்பதைப் பற்றியும் இதுவரை பயிற்சி வகுப்பில் கலந்துக்கொள்ளாத ஆசிரியர்கள் கண்டிப்பாக கலந்துக்கொள்ள வெண்டும் என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து மறைக்கல்வி தலைமையாசிரியாசிரியர்களின் கடமைகள் என்னென்ன என்பதைப்பற்றி சிந்திக்கவும் மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு தேவையான புது முயற்சிகளை எடுக்கவும் வேண்டி கருத்துக்கனை முன்வைத்தார். மேலும் மறைக்கல்வி ஆண்டுவிழாவிற்கான கலை நிகழ்ச்சிகள் மறை வட்ட அளவில் கொடுக்கப்பட்டது. மாலை 4.30 மணியளவில் நன்றியுரை மற்றும் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவுபெற்றது. அனைவருக்கும் தேனீர் விருந்து வழங்கப்பட்டது.



**மறு தேர்வு**

2025-26 ஆம் ஆண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான மறு தேர்வு ஜூன் 21 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமுடு திரு இருதய பள்ளிவளாகத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 முணி வரை நடைபெற்றது.

**மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி**

மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான 10 -ம் பிரிவு அடிப்படை பயிற்சி வகுப்புகள் 2026 ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை முதல் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் பிற்பகல் 2.15 மணி முதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது. ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை தொடக்க வகுப்பு மற்றும் பணிவிடை அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. அபிலாஷ் மற்றும் அருட்தந்தை. ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்களும் வகுப்புகள் நடத்தினார்கள் 10-வது பிரிவு மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பில் 29 ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.



***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குனர்***

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" [லூக்கா 1.37]***

**ஆண்டுவிழா**

குழந்தை ஈசோ இயக்க ஆண்டுவிழா 2026, ஜூன் 07, ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை, ஆசீர் அரங்கத்தில் மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் இயக்குநரும், தற்போதைய மறைக்கல்வி இயக்குநருமான அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். முன்னாள் இயக்குநர் அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் அவர்களுக்கு நன்றியும், புதிய இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் புரையிடத்துகுந்நேல் அவகளுக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் இயக்குநர் ஏற்புரை வழங்கினார். புதிய இயக்குநர் இந்த வருடப் புனிதரை (Icon of the year) அறிமுகப்படுத்தினார். மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் தலைமையுரை வழங்கினார். இடையிடையே குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கலைவிழாவில் பங்கெடுத்து வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப் பட்டது. பரைக்கோடு ஆலய குழந்தைகள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். முழுக்கோடு ஆலய ஊக்குவிப்பாளர் நன்றியுரை கூற, பாப்பரசர் கீதத்துடன் ஆண்டுவிழா இனிதே நிறைவடைந்தது.

***அருட்தந்தை ஜோஸ் புரைபிடத்துக்குந்நேல்***
***இயக்குநர்***

# சிறுமலர் MISSION LEAGUE

## மிஷன் லீக் இயக்கம்

நூறு மேனி, வசனம் எழுதும் போட்டி பங்கு அளவில் மே 17, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் மாணவர்களும் ஆசிரியர்களும் அருட்சகோதரிகளுமாக 114 நபர்கள் வசனம் எழுதும் போட்டியில் கலந்து கொண்டனர். 50க்கு மேல் வசனம் எழுதிய 73 பேருக்கான மறைமாவட்ட அளவிலான போட்டி ஜூன் 14, ஞாயிற்றுக்கிழமை அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

2026 ஜூன் 21 அன்று மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. மிஷன் லீக் இயக்குநர் அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தை அவர் கொடி உயர்த்தி துவங்கி வைத்தார். பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமை தாங்கினார். 2026 ம் ஆண்டின் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த வருட செயல்பாடுகளை பற்றி இயக்குநர் தந்தை எடுத்துக் கூறினார். பின் சுமார் 4.30 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது.



கூட்டத்தில் மறைவட்ட இயக்குநர்கள் ஊக்குவிப்பாளர்கள், அருட்சகோதரிகள் மாணவர் பிரதிநிதிகள் என 100 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

***அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்***
***இயக்குநர்***

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்க நடுவண் செயற்குழு கூட்டம் ஜூன் 07 ஞாயிற்றுக்கிழமை, கல்லுவிளை SMYM அலுவலகத்தில் இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் மற்றும் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி ஜீனா FCC அவர்கள் தலைமையில் நடைபெற்றது . அக்கூட்டத்தில் ஜூன் மாத செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. அதில் ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு அனைத்து பொறுப்பாளர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இளையோர் மாநாடு நடத்தலாம் என்றும், ஒவ்வொரு மாதமும் ஏதாவது போட்டிகள் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் சார்பாக நடத்தலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பொறுப்பாளர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு நடைபெற்றது. அன்னிக்கரை ஆலய இளையோர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். நடுவண் செயற்குழு உறுப்பினரான ஷெனிகா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அதனைத் தொடர்ந்து ஒளியேற்றுதல் நிகழ்வு நடந்தது. இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் அவர்களால் தலைவர் உரை வழங்கப்பட்டது. அருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோடில் அவர்கள் ஊடகங்களை இளையோர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை பற்றியும் நடுவண் செயற்குழு பொதுநிலை ஊக்குவிப்பாளர். திரு. அஜித் அவர்கள் சீரோ மலபார் சமூக வலுபடுத்துதல் என்பதை பற்றி கருத்துரை வழங்கினார். தொடர்ந்து ஒவ்வொரு மறைவட்ட பொறுப்பாளர்கள் இணைந்து கலந்துரையாடினார்கள். அதில் புனித அல்போன்சம்மா நடைபயணத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் மாநாடு எங்கு வைத்து நடத்தலாம் என்றும் கலந்தாலோசிக்கப்பட்டது. தொடர்ந்து இளையோர் இயக்க

செயல்பாடுகள் அனைத்திலும் இளையோர்களின் ஈடுபாடு பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்றும் அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் அவர்கள் எடுத்து கூறினார். இளையோர் இயக்க தலைவர் ஜெர்ஃபின் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இறுதியாக இளையோர் இயக்க கீதம் பாடி கூட்டமானது 4.00 மணியளவில் இனிதே முடிவடைந்தது.

தொடர்ந்து நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூடுகை நடைபெற்றது. இதில் ஜூலை மாத செயல்பாடுகள் குறித்து பேசப்பட்டது. முதலில் Amimator அஜித் அவர்களால் ஜூலை 12 முதல் 19 வரை இரவு 8.00 - 8.15 வரை இணையவழி வினாடி வினா போட்டி நடத்தப்படுவதாக முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து நடைபயணம் நடைபெறுவதை பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் இளையோர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்றும் திருப்பலியில் திருப்பணியாளராக இளையோர்கள் நிற்பதாகவும் திருவிவிலியம் வாசித்தல் மற்றும் நன்றியுரை இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் சொல்வதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் கூட்டமானது இனிதே முடிவடைந்தது.

***அருட்தந்தை அனில் ராஜ்***
***இயக்குநர்***

| BIRTHDAYS OF REV. FATHERS - JULY - 2026 | |
|---|---|
| Fr. Thomas Jabanesh | 07 |
| Fr. Liju Marattukalam | 09 |
| Fr. Sanjo Thenplackal | 18 |

# உறவிய மலர்

2026 ஜூன் 15, திங்கட்கிழமை மறைமாவட்ட அளவில் நடைபெற்ற துறைகளுக்கிடையேயான கூட்டத்தில் உறவிய இயக்குனர், ஊக்குவிப்பாளர் அருட்கன்னியர் மற்றும் இரண்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**திருச்சிலுவை தேவாலயம் மாலைக்கோடு**

மாலைக்கோடு பங்கின் உறவிய பணியாளர்களின் கூட்டமானது 2026 ஜூன் 13, சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. ஜேக்கப் ஐயமாத்தற அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒவ்வொரு உறவியம் சார்பாக குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயர்கள் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் போன்றவை அடங்கிய பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பங்குத்தந்தை அவர்கள் அனைத்து உறவிய மக்களையும் அவர்களது இல்லத்தில் சந்திக்க இருப்பதாக தெரிவித்தார்.

புனித அந்தோணியார் தினத்தை முன்னிட்டு மூன்றாம் உறவியம் சார்பில் சிறப்பு திருப்பலி சிறப்பித்து பங்கு மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மூன்றாம் உறவியத்தின் உறவிய கூட்டமானது திரு. சுமேஷ்- சௌமியா அவர்களது இல்லத்தில் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. ஐந்தாம் உறவியத்தின் உறவிய கூட்டமானது திரு. இன்பராஜ்- பிந்து அவர்களது இல்லத்தில் நடைபெற்றது.

**கிறிஸ்து அரசர் ஆலயம், பாலப்பள்ளம்**

ஜூன் 20 அன்று பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் பழைய உறவிய பொறுப்பாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு அனைவருக்கும் நன்றி கூறப்பட்டன.

ஜூன் 21 அன்று அருட்தந்தை அஜின் அவர்கள் தலைமையில் புதிய உறவிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றனர்.

**அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்**
**இயக்குனர்**

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## "தலைமை ஏற்க வா" தலைமைத்துவப் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் "தலைமை ஏற்க வா" தலைமைத்துவப் பயிற்சி மற்றும் மண்டல அளவிலான கூட்டங்கள் 2026 ஜூன் 06 அன்று முழுக்கோடு மண்டலம் சார்பில் உத்திரம்கோடு, ஓசானம் அரங்கில் நடைபெற்றது. சூசைபுரம் மண்டலம் சார்பில் ஜூன் 20 அன்று சூசைப்புரம் புனித அல்போன்சா கல்லூரி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் மொத்தம் 330 சுய உதவிக்குழுத் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்சிகளுக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் தலைமையுரையாற்றி, சுய உதவிக்குழுத் தலைவர்கள் குழுத் தலைவர்களாக மட்டுமல்லாமல், சமூக மற்றும் அரசியல் தலைவர்களாக உருவாக வேண்டும் என வலியுறுத்தினார். சிறப்பு விருந்தினராக காப்பியறை ஊராட்சி மன்ற உறுப்பினர் திருமதி ஆன்சி ஷோபா ராணி அவர்கள் தலைமைத்துவப் பண்புகள், சவால்கள் மற்றும் சமூக முன்னேற்றத்தில் சுய உதவிக்குழுக்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது KKSSS கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது .

## தையல் பயிற்சி வகுப்பு துவக்க விழா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் ஜூன் 10 அன்று ஒருநூறாம்வயலில் தையல் பயிற்சி வகுப்பு துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பெண்களின் திறன் மேம்பாடு, சுயதொழில் உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோர் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தாங்கினார். அவர் தனது உரையில், தொழிற்கல்வி பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தன்னம்பிக்கைக்கும் அடித்தளமாக அமைகிறது என்றும், இப்பயிற்சியை முழுமையாகப் பயன்படுத்தி சிறந்த

தொழில்முனைவோர்களாக உருவாக வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அருட்தந்தை குரியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் KKSSS-ன் சேவைகளைப் பாராட்டினார். பயிற்சியாளர் திருமதி விஜி அவர்கள் பயிற்சியின் நோக்கம் மற்றும் செயல்முறைகளை விளக்கினார்.

இப்பயிற்சியில் 22 மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஊக்குவிப்பாளர் திருமதி ஷோபா அவர்கள் ஒருங்கிணைத்தார். இறுதியில் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## பெயர் கொண்ட திருவிழா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் இயக்குநரின் பெயர் கொண்ட புனித அந்தோணியார் பெயர் கொண்ட விழா ஜூன் 09 அன்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சி இறைவணக்கப் பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. பத்துகாணி ஊக்குவிப்பாளர் திருமதி ரீனா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். தனது தலைமையுரையில், புனித அந்தோணியாரின் எளிமை, தாழ்மை, இறைநம்பிக்கை மற்றும் பிறருக்கான சேவை மனப்பான்மையை அனைவரும் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். KKSSS ஆலோசகர் முனைவர் திரு. சத்தியதாஸ் மற்றும் திருமதி அனிதா மேரி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அலுவலகப் பணியாளர்கள் கலைநிகழ்வுகளை தொகுத்து வழங்கினர். CTWWC திட்ட அலுவலர் திருமதி வினிஷா அவர்கள் நன்றியுரை வழங்கினார். KKSSS கீதத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

***அருட்தந்தை மகேஷ்***
***செயலர்***

# சீனாய் இறையியல் கல்வி மையம்

2026- 2027 ம் ஆண்டின் இறையியல் கல்வி ஆண்டு தொடக்கவிழா. 2026, ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை, படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், இயக்குநர் அருதந்தை ஷிஜோ அவர்களும், அருட்சகோதரி அர்ச்சனா FCC அவர்களும் முன்னிலை வகித்தனர். இறைசெபத்துடன் துவங்கிய இக்கூட்டத்தில் இந்த கல்வி ஆண்டில் சேர்ந்த 23 மாணவர்களுக்கும் புத்தகம் மற்றும் பென் கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது. பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் கூறுகையில் இங்கு பயிலும் ஒவ்வொரு மாணவர்களும் வகுப்பில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். திருச்சபையை குறித்தும் திருப்பலியை பற்றியும் அதிகமாக படிக்க கூடிய ஒரு மேலான ஒரு வாய்ப்பு இதை தவற விட கூடாது என்று கூறினார். இயக்குநர் தந்தை ஷிஜோ அவர்கள் கூறுகையில் அனைத்து வகுப்பும் படித்தால் தான் சான்றிதழ் வழங்கப்படும் என்று கூறினார். இரண்டாம் வருட மாணவர்கள் முதல் வருட மாணவர்களுக்கு மலர் கொடுத்து அன்பை பகிர்ந்து கொண்டனர். பின் கேக் வெட்டி பகிர்ந்து கொண்டு அனைவருக்கும் நன்றி கூறி கூட்டம் இறை ஆசீருடன் நிறைவுற்றது. தற்போது மொத்தமாக 34 மாணவர்கள் இதில் பயின்று வருகின்றனர்.



***அருட்தந்தை ஷிஜோ***
***இயக்குநர்***

# புதுவாழ்வு மையம்
## தக்கலை மறைமாவட்டம்

### அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

உலக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, தக்கலை மறைமாவட்ட புதுவாழ்வு மையம் சார்பாக புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டு இளையோர்களின் எதிர்காலம், போதைப்பொருள் பயன் பாட்டின் தீமைகள் மற்றும் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதன் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார்.

புது வாழ்வு மையத்தின் இயக்குநர் அருட்பணி கிறிஸ்துதாஸ் அவர்கள் நிகழ்ச்சியை முன்னின்று ஒருங்கிணைத்து போதை பழக்கத்தால் தனிநபர், குடும்பம், மற்றும் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள். மறுவாழ்வு சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக அனைவரும் போதை பொருள் இல்லா சமூகத்தை உருவாக்கும் உறுதி மொழியை ஏற்றனர். இந்நிகழ்சி மாணவர்களிடையே பொறுப்புணர்வை வளர்த்து, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நோக்கி அவர்களை ஊக்குவிக்க பயனுள்ள நிகழ்வாக அமைந்தது. புது வாழ்வு மையம் தொடர்ந்து பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பொது மக்களிடையே போதை பொருள் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகிறது.



***அருட்பணி. கிறிஸ்துதாஸ்***
***இயக்குநர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து
# Seminarians

2026 ஜூன் 01 அன்று அனைத்து உயர் குருமட மாணவர்களும் தங்கள் குரு மடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர். அருட்சகோதரர்கள் அனைவரும் தங்களது கல்வி மற்றும் உருவாக்கப் பயிற்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இவ்வாண்டு களப்பணி செய்யவிருக்கும் 2 அருட்சகோதரர்களும் தங்களுடைய பணியை 01 ஜூன் அன்று தொடங்கியுள்ளனர் மேலும், களப்பணியாளர்களுக்கான ஒரு நாள் தியானம் 22 ஜூன் 2026 அன்று படந்தாலுமூடு ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இக்களப்பணியாளர்களின் தலைவராகச் சகோதரர் வின்சிலின் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
திருத்தொண்டர் டிவின் ராஜ் அவர்கள், ஜூலை மாத இறுதியில் நடைபெறவிருக்கும் விரிவான தேர்விற்காக (comprehensive exam) தம்மைச் சிறப்பாக தயார்படுத்தி வருகிறார்.

*இப்படிக்கு,*
*அருட்சகோ காட்வின், ஸ்ரீஜித்*

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**ஜூலை 03** – புனித தோமையார் நினைவுத் திருநாள் (துக்ரானா)
**ஜூலை 05** – அருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில் – 41 வது நினைவுத் திருப்பலி
**ஜூலை 11** – அருட்தந்தையர்களுக்கான கூட்டம்
**ஜூலை 15** – மறைவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம்
**ஜூலை 25** – புனித அல்போன்சா நடைபயணம்

## அருள்தந்தை தாமஸ் பௌவத்துபறம்பில் –

# இறுதி அஞ்சலி

அருள்தந்தை தாமஸ் பௌவத்துபறம்பில் அவர்களின் உடல், பொது அஞ்சலிக்காக 2026 ஜூன் 1 திங்கட்கிழமை, நாகர்கோவிலில் உள்ள புனித அல்போன்சா திருத்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மறைமாவட்டத்தைச் சார்ந்த ஏராளமான இறைமக்கள் காலை 10:30 மணி வரை அவருக்கு அஞ்சலி செலுத்தினர். காலை 10:30 மணி முதல் 11:15 மணி வரை, அருள்பணியாளர்கள், துறவறச் சகோதரிகள் மற்றும் பொதுநிலைப் பிரதிநிதிகள் ஆகியோர், அருட்தந்தைக்கு இரங்கல் செய்திகளை வழங்கினர். தொடர்ந்து காலை 11:15 மணியளவில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

தொடர்ந்து அருட்தந்தையின் உடல் சங்ஙனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் குருக்கள் இல்லத்திற்குக் (Clergy Home) கொண்டு செல்லப்பட்டு, அங்கு இறந்தவர்களுக்கான சிறப்புத் திருவழிபாடு (Office for the Dead) நடைபெற்றது. அதன்பின், கூரோப்படாவில் உள்ள அவரது குடும்ப இல்லத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு. இறுதிச் சடங்குகள் 2026 ஜூன் 2 அன்று நடைபெற்றது.

இறுதிச் சடங்குகளின் முதல் பகுதி மதியம் 1:00 மணிக்கு இல்லத்தில் தொடங்கியது; ஆயர் மார் ஜோசப் பெரும்தோட்டம் தலைமை தாங்கினார். இரண்டாம் பகுதி அவருடைய சொந்த ஆலயத்தில் ஆயர் மார் பாடியத் அவர்களால் நடத்தப்பட்டது. மூன்றாம் பகுதி திருப்பலி மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் நிறைவேற்றப்பட்டது. அருட்தந்தை மாணிப் புதியிடம் மறையுரை வழங்கினார். நிகழ்வின் இறுதிப் பகுதிக்கு கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தலைமை தாங்கினார். ஆயர் மார் கொச்சுபுரக்கல் அவர்களும் இல்லத்திற்கு வருகை தந்து, அருட்தந்தையின் ஆன்மாவிற்காக இறைவேண்டல் செய்தார். இறுதிச் சடங்குகள் முழுவதும் அருட்தந்தையின் உடன் பயின்ற அருட்பணியாளர்கள் உடனிருந்து வழிநடத்தினர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## துறைகளுக்கிடையேயான கூட்டம்

மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம் 2026 ஜூன் 15, திங்கட்கிழமை தக்கலை 'சங்கமத்தில் நடைபெற்றது. சிரோ-மலபார் பொது விவகாரங்கள் ஆணையத்தின் (Syro-Malabar Public Affairs Commission) செயலர் அருட்தந்தை ஜேம்ஸ் கோகவயலில் கருத்தாளராக கலந்து கொண்டார். 'சிரோ-மலபார் சமூக வலுவூட்டல் ஆண்டு' (Syro-Malabar Empowerment Year) என்பதே கூட்டத்தின் மையப்பொருளாக அமைந்திருந்தது. தற்காலத்தில் சீரோ-மலபார் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்தி, இந்த முன்னெடுப்பின் முக்கியத்துவம் குறித்த விரிவான கருத்துக்களை அருட்தந்தை முன்வைத்தார்.

கூட்டத்தின் இரண்டாம் அமர்வில், ஒவ்வொரு துறையும் தங்கள் தற்போதைய செயல்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினர்.

## சீரோ–மலபார் சமூக வலுவூட்டல் ஆண்டு – நிர்வாக குழு கூட்டம்

சீரோ-மலபார் சமூக வலுவூட்டல் ஆண்டு – நிர்வாக குழுவின் கூட்டம், 2026 ஜூன் 15 அன்று பிற்பகல் 2:00 மணிக்கு தக்கலை 'சங்கமத்தில் நடைபெற்றது. இயக்குநரின் குழு அறிக்கையுடன் கூட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து, மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டன. இதை எளிமைப்படுத்தி அனைத்துத் துறைகளுக்கும் விநியோகிக்கவும், அதன் மூலம் வழங்கப்படும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் உறுதியான செயல் திட்டங்களைத் தயாரித்துச் சமர்ப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டு, பொதுநிலையினர் பணிக்குழுவிடம் (Labour and Laity Commission) பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

## விரிவாக்கப்பட்ட மறைதொண்டு தளங்கள் சந்திப்பு

2026-ஜூன் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில், மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட மறைப்பணிப் பகுதிகளான நாங்குநேரி, கயத்தார், விருதுநகர், ராமேஸ்வரம், தேனி, சின்னமனூர், கம்பம் மற்றும் மதுரை ஆகிய இடங்களுக்களை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் சந்திப்பு நடைபெற்றது, அருள்பணியாளர்கள், அருட்கன்னியர்களை சந்தித்தல், கட்டமைப்புத் திட்டங்களை மதிப்பிடுதல் மற்றும் மேய்ப்புப் பணி சார்ந்த முன்னுரிமைகளை அடையாளம் காணுதல் ஆகியவற்றில் கவனம்

செலுத்தப்பட்டது. நாங்குநேரியில், 'நிர்மலா இல்லம்' (Nirmala Home) திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

## நவகன்னியர்களின் சந்திப்பு

இந்த வருடம் துறவற வாழ்வின் முதல் மற்றும் இறுதி வார்த்தைப்பாடு ஏற்ற அருட்சகோதரிகளின் சந்திப்பு 2026 ஜூன் 24 அன்று மாலை 6:00 மணிக்கு, தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. ஆயர் இல்ல ஆலயத்தில், மாலை செபம் (Ramsa) மற்றும் செபமாலையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. அருட்தந்தை சுனில் ஆன்றணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். அருட்சகோதரி மேரி ராணி, அருட்சகோதரர்கள் (Regent Brothers) இணைந்து இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக ஒருங்கிணைத்தினர்.

## TPWA செயற்குழு கூட்டம்

தக்கலை அருட்தந்தையர் நலவாரிய கூட்டமைப்பு (TPWA) செயற்குழு கூட்டம் 2026 ஜூன் 25 அன்று ஆயர் இல்லத்தில் ஆயர் தலைமையில் நடைபெற்றது. அனைத்துக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். குருக்களுக்கான புதிய இல்லத்தைக் கட்டுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

## கைக்காரர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான கூட்டம்

தக்கலை மறைமாவட்டம், அனைத்து ஆலயங்களின் 'கைக்காரர்'கள் (Kaikkars) மற்றும் கணக்காளர்களுக்கான (Parish Accountants) வருடாந்திரக் கூட்டம் மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சி 2026 ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. காலை 10:00 மணிக்கு பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து தொடக்க அமர்வில், ஆவனக்காப்பாளர் அனைவரையும் வரவேற்றார். ஆயர் தலைமையுரை வழங்கினார். கூட்டத்தின் முதல் அமர்வை குழித்துறை மறைமாவட்ட கூட்டுறவு மேலாளர் அருட்தந்தை டொமினிக் கடாட்சதாஸ் வழிநடத்தினார். மதிய உணவிற்கு பின், பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் மற்றும் பேரருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் ஆகியோர் இரண்டு தகவல்சார் அமர்வுகள் நடத்தப்பட்டன. திருச்சபையில் பொதுநிலைப் பணியாளர்களின் பங்கு, 'கைக்கார்'களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள், பொதுமன்றம் மற்றும் பங்குப் பேரவை ஆகியவற்றின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள், மற்றும் நமது பங்குகளில் பின்பற்றப்படும் கணக்கு வைப்பு முறைகள் ஆகியவை குறித்து அவர்கள் நடைமுறை வழிகாட்டுதல்களையும் திருச்சபைச் சட்ட அடிப்படையிலான விளக்கங்களையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சுமார் 65 பேர் பங்கேற்றனர்.

# இதர செய்திகள்

- அருட்சகோதரி லிசா SH அவர்கள், 2026 ஜூன் 1 முதல் மறைமாவட்ட உறவிய ஒருங்கிணைப்பாளராக (Animator) நியமிக்கப்பட்டுள்ளார்.
- அருட்சகோதரி ஆலிஸ் SABS அவர்களின் 41–வது நினைவு நாள் 2026 ஜூன் 6 அன்று அனுசரிக்கப்பட்டது. அருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் திருப்பலியை நிறைவேற்றினார்.
- பெரும்சிலம்பு LSDP அருட்சகோதரி ஷீனா LSDP அவர்களின் தந்தை திரு. சாக்கோ குழிமட்டதில் அவர்கள், 2026 ஜூன் 11 அன்று இறைவனடி சேர்ந்தார். அருட்சகோதரி அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- மறைமாவட்ட முதன்மை பேராலய நிதிக் குழுக்கூட்டம் 2026 ஜூன் 11 அன்று சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பேராலயக் கட்டுமானப் பணி வரவு–செலவு அறிக்கையை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் சமர்ப்பித்தார். கணக்குகள் குறித்த விளக்கங்களை பேரருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் அளித்தார்.
- தக்கலை ஆயர் இல்லம் மற்றும் தக்கலை CMC கன்னியர் இல்லத்தில் பல்வேறு ஆண்டுகள் பணியாற்றிய திரு. சுனில் குமார் 2026 ஜூன் 23 அன்று மாரடைப்பு காரணமாக காலமானார். அவரது குடும்பத்துக்கு மறைமாவட்டம் சார்பாக இரங்கல் தெரிவித்து கொள்கிறோம்.
- படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்ட அருட்பணியாளர்களின் கூட்டம் 2026 ஜூன் 22 திங்கட்கிழமை கிறிஸ்துராஜபுரம் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. சூசைபுரம் மற்றும் தக்கலை–பிலங்கலை மறைவட்ட அருட்பணியாளர்களின் கூட்டம் 2026 ஜூன் 24 புதன்கிழமை கல்லுவிளை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது.

- பாலப்பள்ளம் பங்கில் பணியாற்றி வரும் அருட்சகோதரி ஜோதிஸ் SABS அவர்களின் தாய் திருமதி லீலம்மா மேத்யூ (84) அவர்கள் 2026 ஜூன் 30 அன்று தனது விண்ணக வாழ்வை அடைந்தார், அவரது குடும்பத்தினருக்கு மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| FEASTDAYS OF REV. FATHERS - JULY - 2026 | |
|---|---|
| Fr. Jiji Koipuram | 03 |
| Fr. Thomas Sathianesan | 03 |
| Fr. Nivin Kanjirakkatt | 03 |
| Fr. Shinto Souriyamkuzhi | 03 |
| Fr. Robins Kuzhikodil | 03 |
| Fr. Ajeesh Attiyil | 03 |
| Fr. Aby Poovathumoottil | 03 |
| Fr. Johnson Pulingappally MCBS | 03 |
| Fr. Thomas Jabanesh | 03 |
| Fr. Thomas Cheppila CMI | 03 |
| Fr. Thomas Pandimackal CMI | 03 |
| Fr. Kurian Mathew Koipuram | 15 |
| Fr. Rajesh Vayalumkal MCBS | 15 |
| Fr. Jomy Kamukamattathil | 15 |
| Fr. Joice Chelachuvattil MCBS | 15 |
| Fr. Sanjo Theneplackal | 15 |
| Fr. Kurian Karuthedom | 15 |
| Fr. Jacob Aiyammatra | 25 |
| Fr. Vinod Kanakalil | 25 |
| Fr. Toji Parabilparambil | 25 |

# மறைவட்டச் செய்திகள்

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

ஜூன் 03 அன்று பங்குதந்தை அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பலியில் அவர்களுக்காக சிறப்பாக ஜெபிக்கப்பட்டது.

2026 ஜூன் 04 பள்ளி திறப்பினை முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்காக திருப்பலியில் சிறப்பு ஜெபம் ஜெபிக்கப்பட்டது.

ஜூன் 05 அன்று முதல்வெள்ளி மாலை சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது.

2026 ஜூன் 09 அன்று பேராலய பணிகளுக்கு நிதி திரட்டும் பொருட்டு ஊறுகாய் தயாரிக்கப்பட்டது. இயன்ற அளவிலான பங்கு மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஜூன் 14 அன்று மாலை பங்குத்தந்தை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

ஜூன் 14 அன்று அருள் தந்தை அனில் ராஜ் அவர்கள் தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றது.



ஆலயதிருவிழாவை முன்னிட்டு 2026 ஜூன் 26 முதல் அருள் தந்தை தலைமையில் வீடு சந்திப்பு நடைபெற்றது

### புனித தோமையார் ஆலயம் – மாதாபுரம்

2026 ஜூன் 07 அன்று திருப்பலிக்கு பின் பங்கு தந்தை குரியன் அவர்கள் தலைமையில் திருவிழா ஆயத்த கூட்டம் நடைபெற்றது

ஜூன் 14 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது

ஜூன் 21 அன்று மாற்றலாகி செல்கின்ற அருட்சகோதரி ஜூலியட் அவர்களுக்கு பிரிவு உபசார விழாவும் புதிதாக வருகை தந்த அருட்சகோதரி ட்றீசா அவர்களுக்கு வரவேற்பும் வழங்கப்பட்டன.

திருவிழாவை முன்னிட்டு ஜூன் 27 முதல் பங்குத்தந்தை தலைமையில் வீடு சந்திப்பு நடைபெற்றது.

### தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

2026 ஜூன் 04 அன்று பள்ளி மாணவர்களுக்காக சிறப்பு திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து அனைத்து மாணவர்களுக்கும் தலையில் கைவைத்து சிறப்பு ஜெபம் நடத்தப்பட்டது.

ஜூன் 13 அன்று மாலை 6 மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் அருள் தந்தை குரியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

2026 ஜூன் 12 ஆம் தேதி பங்கில் திரு இருதய திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மறை மாவட்ட மரியாயின் சேனை சார்பில் வீடுகள் தோறும் மாதா சுரூபம் பவனி பங்கில் கொண்டுவரப்பட்டு வீடுகள் தோறும் ஜெபமாலை பவனியுடன் பயணிக்கிறது. ஜூன் 21 ஆம் தேதி புதிய உறவிய தலைவர்கள் தேர்வு நடத்தப்பட்டு, 28 அன்று பங்குத்தந்தை தலைமையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பங்கில் பணியாற்றும் அருள் சகோதரி ஜோதிஸ் அவர்களின் தாயார் 30 ஆம் தேதி காலமானார். அவரது இறுதிச் சடங்கில் பங்கு தந்தையுடன் இணைந்து பங்கில் இருந்து பலர் பங்கேற்றனர்.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

தொடக்ககாலத்தில் ஆலயம் தோன்ற உதவி செய்த இந்து மத சகோதரர் திரு. வாசவன் அவர்கள் காலமானார். அன்னாருக்கு பங்கு மக்கள் சார்பாக பங்கு தந்தை தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது

2015 முதல் 2017 வரை நமது பகுதியில் சேவை செய்த அருட்சகோதரி.



ஜெமீமா பாலர்பள்ளியில் பணியாற்ற வருகை புரிந்துள்ளார்.

சிறுமலர் மிஷன் லீக் மறைவட்ட ஒருங்கிணைப்பாளராக திரு சுஜூ அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

மிஷன் லீக் இயக்கத்தின் ஜூன் மாத செயல்பாடாக பங்குதந்தை உதவி

பங்குதந்தை, மிஷன் லீக் உறுப்பினர்கள் இணைந்து பங்கு தந்தையின் இல்லத்தின் மேல் மாடியை சுத்தம் செய்தனர்.

- **திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுக்கல்**



முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் ஜூன் 21 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் தந்தையர் தினம் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஜூன் 27, சனிக்கிழமை இளையோர் இயக்கம் சார்பாக மாலை 6 :00 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து அருட்தந்தை ராபின்ஸ் குழிக்கோடில் தலைமையில் அருட்பொழிவு தியானமும் நடைபெற்றது.

- **புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு**

முழுக்கோடு, புனித தோமையார் ஆலயத்தில் 2026 ஜூன் 25முதல் ஜூலை 05 வரை குடும்ப விழா மற்றும் திருவிழா நடைபெற்றது.

## படந்தாலுமூடு

- **திரு இருதய மறைவட்ட ஆலயம்– படந்தாலுமூடு**

படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய திருவிழா 2026 ஜூன் 05 முதல் 14 வரை 10 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மாலை 6:30 மணிக்கு பங்குத்தந்தை பேரருட்பணி. தோமஸ் சத்தியநேசன் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள். திருவிழாவின் ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலையும், 6:00 மணிக்கு திரு இருதய நவநாள் செபமும், மாலை 6:15 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது. இரண்டாம் நாள் திருவிழா திருப்பலிக்கு பின் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும், மூன்றாம் நாள் திருப்பலி குருகுல முதல்வர் பேருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் ஐந்து குழந்தைகள் முதல் திருவிருந்து பெற்றுக்கொண்டார்கள். ஐந்து மற்றும் ஆறாம் நாள் திருப்பலிக்குப்பின் நற்செய்தி பெருவிழா



நடைபெற்றது. ஏழாம் நாள் செபமாலை பவனி மற்றும் திருஇருதய திருநாள் சிறப்பு திருப்பலி மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. ஒன்பதாம் நாள் ஆடம்பர திருப்பலிக்கு பின் திருவிழா திருப்பவனியும், பத்தாம் நாள் காலை 9 மணிக்கு இராசை திருப்பலியும் அதை தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

- **புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு**

2026 ஜூன் 14 அன்று திருப்பலிக்கு பின் பங்குதந்தை அருட்தந்தை ஆண்டனி மாடப்புரைக்கல் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் திருநாள், திரு இருதய திருநாள் மற்றும் புனித மரியம் தெரசா திருநாள் ஆகியவை கொண்டாடப்பட்டது. மறைக்கல்வி மாணவர்கள் புனிதர்களின் வேடமணிந்து விழாவை சிறப்பித்தார்கள்.

- **புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை**

2026 ஜூன் 26 அன்று திருப்பணியாளர்களுக்கான அரை நாள் பயிற்சி நடைபெற்றது. பங்குத்தந்தை பயிற்சி வகுப்பை வழி நடத்தினார்.
ஜூன் 28 அன்று FCRA சட்டம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அநீதிகளுக்கு சாதகமாக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை திரும்ப பெற ஒரு மணி நேர சிறப்பு ஆராதனை நடைபெற்றது.



## களியல் மறைவட்டம்

- **புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி**

ஆலயத் திருவிழாவை முன்னிட்டு பங்குத்தந்தை அவர்களால் அனைத்து வீடுகளும் மந்திரிக்கப்பட்டது.

ஜூன் மாதம் 26 ,27,28 ஆகிய மூன்று நாட்களும் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. அட்டப்பாடி செகியோன் தியானக் குழு உறுப்பினர்

அருட்தந்தை செபாஸ்டின் கிறிஸ்டி மற்றும் குழுவினர் வழி நடத்தினர். இதில் களியல் மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்டத்திலிருந்து ஏராளமான இறை மக்கள் கலந்து கொண்டனர்.

### திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

ஜூன் 04 அன்று புதிய கல்வி ஆண்டின் துவக்கமாக காலை சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பள்ளி மாணவர்கள் அதிகமாக கலந்து கொண்டனர்.

ஜூன் 07 மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.



ஜூன் 12 அன்று திரு இருதய திருநாள் சிறப்பாக சிறப்பிக்கப் பட்டது. ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி, மற்றும் புது நன்மை வழங்கும் விழா நடைபெற்றது. மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஆன்டணிஜோஸ் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புது நன்மை வழங்கி

சிறப்பு திருப்பலி நிறைவேற்றினார்.

2026 ஜூன் 21 அன்று மரியாவின் சேனை களியல் வட்டார கருத்தமர்வு பள்ளிக்கோணம் பங்கில் நடைபெற்றது.

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. சிறியாக் கூட்டுமேல் அவர்களின் நினைவு சிறப்பு திருப்பலியும் ஒப்பீசு செபம் ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை சிறியக்கூட்டுமேல் நினைவு கல்வி உதவித்தொகை 3 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

## தக்கலை – பிலாங்காலை மறைவட்டம்

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஜூன் 12-ம் தேதி பங்குதந்தை தலைமையில் பங்கு மக்கள் இணைந்து மேழக்கோடு ஆலயத்திற்கு திருப்பயணம் சென்றனர்.

ஜூன் 13, சனிக்கிழமை நோயாளிகளுக்கான சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது.

ஜூன் 14 ம் தேதி குழந்தை இயேசு மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டது.

ஜூன் 27அன்று மாங்கரை புனித வியாகப்பர் ஆலய வளாகத்தில் நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் இரு குழுக்கள் கலந்து கொண்டு 2-ம் பரிசு வென்றனர்.



- **புனித சூசையப்பர் ஆலயம் – தடிக்காரன்கோணம்**

ஜூன் 7, ஞாயிற்றுக்கிழமை திருப்பலியைத்தொடர்ந்து இந்த வருட கல்வி ஆண்டிற்கான மறைக்கல்வி துவக்கவிழா நடைபெற்றது.

- **புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை**

ஜூன் 12 சனிக்கிழமை, பங்குதந்தை தலைமையில் பங்கு மக்கள் அனைவரும் மேழக்கோடு ஆலயத்திற்கு திருப்பயணம் சென்றனர்.

ஜூன் 14-ம் தேதி மறைமாவட்ட அளவில் நடைபெற்ற நூறுமேனி வசனம் எழுதும் போட்டியில் பங்களவில் வெற்றி பெற்றவர்கள் கலந்து கொண்டனர்.

ஜூன் 14 முதல் 16 மற்றும் 21 முதல் 23 ஆகிய தினங்களில் அருட்தந்தை அவர்களால் உறவியம் வாரியாக வீடு சந்திப்பு நடத்தப்பட்டது.

- **புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – வெள்ளாம்பி**

ஜூன் 7 ம் தேதி மறைக்கல்வி இந்த வருட துவக்கவிழா நடைபெற்றது

ஜூன் 12-ம் தேதி பங்குதந்தை தலைமையில் பங்கு மக்கள் இணைந்து மேழக்கோடு ஆலயத்திற்கு திருப்பயணம் சென்றனர்.

## நித்திரவிளை

- **புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு**

2026 ஜூன் 05 அன்று மாலை 6.00 மணிக்கு திருப்பலியும் தியான உரையும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. அருட்தந்தை மிஜோ அவர்கள் தியான உரை வழங்கினார். மேலும் பொது பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது.

ஜூன் 14 அன்று திருப்பலியில் 5-ஆம் உறவிய மக்கள் தங்கள் உறவிய

பாதுகாவலர் புனித அந்தோணியார் திருவிழாவை காணிக்கைப் பவனியுடன் சிறப்பித்தனர். மேலும் மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தையின் தலைமையில் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது.

ஜூன் 21 அன்று புனித எவுப்பிராசியா திருவிழாவை முன்னிட்டு அந்த உறவிய மக்கள் பாதுகாவலர் திருவிழாவை காணிக்கைப் பவனியுடன் சிறப்பித்தார்கள்.

மரியாயின் சேனையின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் ஆயத்தமாக மாதாவை கையில் ஏந்தி பங்கின் அனைத்து வீடுகளிலும் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இம்மாதா பயணத்தை மரியாயின் சேனை உறுப்பினர்கள் முன்னின்று வழிநடத்தினார்கள்.

---

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## தென்காசி மறைத்தள செய்திகள்

### மாதர் ஜோதிஸ் இயக்க கூட்டம்

புளியரை, புனித குழந்தை தெரசாள் ஆலயம் மற்றும் வாஞ்சி நகர் புனித மரியன்னை ஆலயத்தில் பங்களவில் மாதர் ஜோதிஸ் கூட்டம் நடத்தப்பட்டு புதிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### புனித மரியன்னை ஆலயம் வாஞ்சி நகர்

பங்கு திருவிழாவை முன்னிட்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி பங்குப் பேரவை நடத்தபட்டு புதிய கைக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆலய திருவிழா தயாரிப்பாக பங்குத்தந்தை சுமேஷ் மற்றும் அருட்கன்னியர்கள் இணைந்து அனைத்து இல்லங்களிலும் சென்று மாதாவின் திருசுரூபபேடகம் வைத்து ஜெபமாலை ஜெபித்து வருகின்றனர்.

### புனித குழந்தை தெரசாள் ஆலயம் புளியரை

புளியரை, புனித குழந்தை தெரசாள் ஆலயப் பங்குத்தந்தை ஜான் ஜோசப்

அவர்கள் அங்குள்ள கிராம மக்களின் கல்வி வளர்ச்சிக்காக மாலை நேர கல்வி ஜூன் மாதம் 5 -ஆம் தேதி முதல் தொடங்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

## சகாய மாதா ஆலயம் – சுந்தரபாண்டியபுரம்

சுந்தரபாண்டிபுரம் மறைத் தளத்தில் புதிதாக இரண்டு உறுப்பினர்கள் சேர்ந்து திருமுழுக்கு பெற்றனர். மேலும் ஒருவருக்கு திருமண அருளடையாளமும் வழங்கப்பட்டது.



சுந்தரபாண்டியபுரம் ஆலயத்தின் புதிய பங்கு தந்தையாக அருட்தந்தை ஜோகேஷ் அவர்கள் பணி நியமனம் பெற்று பொறுப்பேற்றார்.

## அன்பு இல்லம் வடகரை

அன்பு இல்ல இயக்குனர் அருட்தந்தை ராஜேஷ் அவர்கள், தற்பொழுது ராஜபாளையத்தில் புதிய அன்பு இல்லம் துவங்குவதற்காக அனுமதி சமூக நலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி கெ. ஜெகதீஸ்வரி அவர்களை சந்தித்து அனுமதி கோரிக்கைகளை வழங்கியுள்ளார்.

## ஆயர் சந்திப்பு மற்றும் அருட்பணியாளர்களின் கூட்டம்

2026, ஜூன் மாதம் 27 அன்று ஆம்பூர் CMC கன்னியர் இல்லத்தில் அருட்பணியாளர்கள் மற்றும் அருள்கன்னியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. சிறப்பு நற்கருணை ஆராதனையுடன் துவங்கிய இக்கூட்டத்தில் மறைமாவட்ட ஆயர் மேதகு மார். ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். தென்காசி மறைத் தளத்தில் பணியாற்ற வருகை தந்திருக்கின்ற அருட்தந்தையர்களுக்கும், அருள்கன்னியர்களுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. குருத்துவ வெள்ளி விழா கொண்டாடுகின்ற அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்களுக்கும் வெள்ளிவிழா சிறப்பு வாழ்த்துக்கள் வழங்கப்பட்டன.

## MONTHLY AGENDA – JULY 2026

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 3 | Fri | **PC:** Training for Mike operators, Sacristans and Sisters |
| 4 | Sat | **TCSL:** Inauguration |
| 5 | Sun | **VC :** Vocation Promotor Visit – Thuc - Pilankalai Forane<br>**CAT:** BTCT<br>**CML:** St. Thomas Day celebration in units<br>**STI :** Class<br>**SVP :** CC Meeting |
| 7 | Tue | **FA :** Doctor's Visit<br>**MJ :** Kolattam Competition<br>**STI :** Academic Inauguration |
| 10 | Fri | **KKSSS :** Arockiya Mela |
| 11 | Sat | **SMYM :** Forane directors meeting<br>**FA :** Marriage Preparation Course<br>**MS :** Pilgrimage<br>**TM :** Bible Convention at Mekkarai |
| 12 | Sun | **URM :** Manjalumoodu & Kaliyal Forane Leaders Retreat<br>**CAT :** BTCT<br>**FA :** Marriage Preparation Course<br>**SVP :** AC Meeting |
| 18 | Sat | **SINAI :** One day Retreat<br>**EIRD :** Bishop's Meeting |
| 19 | Sun | **CAT :** BTCT<br>**SMYM :** Central team Meeting<br>**STI :** Class |
| 21 | Tue | **FA :** Doctor's Visit |
| 24 | Fri | **KKSSS :** Grandparents day |
| 25 | Sat | **ASc :** Seminar for Students |
| 26 | Sun | **URM :** Arukani Forane Leaders Retreat<br>**CAT :** Sunday School Anniversary<br>**KII :** Forane Level monthly Activity |
| 27 | Mon | **HC :** Grandparents Day celebration |
| 28 | Tue | **MIG :** Online Novena of St.Alphonsa |

**Fr. Antony Jose, Co-ordinator**

## BISHOP'S ENGAGEMENTS - JULY 2026

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-3 | | | Extend Territory Pilgrimage |
| 4 | Sat | 11.45 am | **Thodupuzha :** Jubilee Qurbana at Thabor Retreat Center |
| 5-6 | | | **Madurai:** TNBC |
| 7 | Tue | 10.30 am | **Kooroppada:** Remembrance Holy Qurbana Fr. Pawathuparampil |
| 8 | Wed | 10.00 am | **Thuckalay:** Meeting with Mr. Joseph (V Star) |
| 9 | Thu | 10.00 am | **Anakkarai:** Marriage Holy Qurbana |
| 10 | Fri | 10.00 am | **Thuckalay:** Curia Meeting<br>**Pattam:** Mar Ivanius, Holy Qurbana |
| 11 | Sat | 09.30 am | **Sangamam:** Papal Encyclical Seminar & Priests Conference |
| 12 | Sun | 10.00 am | **Bishop's House:** Meeting with Regency brothers<br>**Kalluvilai:** Mather Jothis inauguration |
| 13 | Mon | 03.00 pm | **Marthandam:** UCC Meeting |
| 14 | Tues | 10.30 am | **Changanaserry:** Sr. Mary OMMI, Death Anniversary Qurbana |
| 15 | Wed | 10.00 am | **Thuckalay:** Forane Vicars Meeting |
| 16 | Thu | 10.00 am | **Thuckalay:** Meeting with Charitable Institution Directors and Superiors |
| 17 | Fri | | Bishop's House \| Parish visit |
| 18 | Sat | 10.00 am | **Thuckalay:** Education Committee Meeting |
| 19 | Sun | 02.00 pm | **Kalluvilai:** Catechism Department Anniversary |
| 20 | Mon | 10.00 am | **Thuckalay:** Curia Meeting |
| 21 | Tues | 10.30 am | **Thuckalay:** Presbyteral Council<br>Thuckalay >> Bangalore |
| 22-24 | | | **Bangalore** |

| | | | |
|---|---|---|---|
| 25 | Sat | 06.00 am | **Nagercoil:** St. Alphonsa Nadaipayanam |
| 26 | Sun | 09.00 am | **Anjugramam:** Feast Day Holy Qurbana |
| 27 | Mon | | **Mezhacode:** Pilgrimage |
| 28 | Tue | | Bishop's House \| Parish Visit |
| 29 | Wed | | Bishop's House \| Parish Visit |
| 30 | Thu | | **Champakkulam:** First Death Anniversary Qurbana |
| 31 | Fri | | Bishop's House |

**Fr. Sunil Antony, Secretary to Bishop**

## மறைமாவட்ட பேராலயப் பணி

மறைமாவட்ட மக்களின் ஒரு முக்கிய கனவாகிய மறைமாவட்ட முதன்மை பேரலாயத்தின் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கட்டுமான பணிகளின் பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு திருச்சூர் மறைமாவட்டத்தின் பேராலயம், புனித அந்தோணியார் மறைவட்ட ஆலயம் உட்பட பல ஆலயங்களுக்கு நமது ஆயர் தலைமையில் அருட்தந்தையர்கள் மற்றும் பொது மக்கள் அடங்கிய குழுவினர் சென்று திருப்பலி நிறைவேற்றி பொருளுதவி கேட்டு வருகின்றனர், ஆயரின் திருப்பலி மறையுரையில். திட்டத்தின் அவசர நிதித் தேவைகளை எடுத்துரைத்து. பங்கு மக்களிடமிருந்து தாராள மனப்பான்மையில் உதவிகள் பெறச் செய்தது, இந்த முயற்சி திட்டத்திற்கான நிதியை திரட்டியது மட்டுமல்லாமல், கட்டுமான பணியின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அமைந்தது.

பேராலயக் கட்டுமானப் பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, அங்கு மண்ணின் நிலைத்தன்மை பரிசோதிக்கப்பட்டு. கட்டடத் தூண்களின் அடித்தளங்களுக்கான கான்கிரீட் போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் கான்கிரீட் தூண்களுக்கான கம்பிகள் நிறுவப்பட்டுள்ளன. மறைமாவட்டத்தின் முக்கிய திட்டமான முதன்மை பேராலய கட்டுமான பணிகளில் நாமும் பங்கேற்போம். நம்முடைய அன்றாட செபங்களில் பணிகளை நினைவு கூர்வோம்.



# நமது பேராலயத்திற்காக செபிப்போம்







**June 28**

## KAIKKARS & ACCOUNTANTS ANIMATION PROGRAMME AT SANGAMAM



**June 27**

## MISSION GATHERING AT THENKASI



**June 25**

## TPWA MEETING AT THUCKALAY



For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570